நிலத் தகராரில் முழு கவனம் செலுத்த வேண்டியதாக இருக்கிறது, அதனால் பார்க்க முடியாது என்று சொல்லி விடுகிறார்கள். இந்த முறையை மாற்றி அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சேரியிலுள்ளவர்களுக்கு சேரியில் தான் இடம் கொடுக்கவேண்டும் என்று சிலர் சொல்லுகிறார்கள். அது சரியல்ல. இதனால் ஜாதி ஒழிப்பு என்பது முடியாது. இப்படி பிரிவினை செய்துகொண்டுபோனால் ஜாதி ஒழிப்பு பிரச்னை ஒரு நாளும் தீராது. ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டுமானால் ஜாதி ஹிந்துக்கள் இருக்கும் இடங்களில் எந்த எந்த இடங்களில் காலி மனைக்கட்டுகள் இருக்கின்றனவோ அந்த இடங்களில் ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கலாம். அவர்களுக்கு அந்த மனைக்கட்டுகளை வழங்குவதற்கு தனியான சலுகை கொடுக்கலாம். ஏற்கனவே நாம் முஸ்லீம்களுக்கு என்று தனி இடம் கொடுத்ததால் எவ்வளவோ கஷ்டங்கள் ஏற்பட்டன. அவர்கள் முதலில் இந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொண்டு இதில் சேர்ந்துகொண்டு தனியாக ஜாதியைக்கொண்டு வந்து புகுத்தியிருக்கிறார்கள். அவர்கள் காங்கிரஸ் கட்சியில் சேரவேண்டும் என்று வந்தாலும் அவர்கள் ஜாதியை விட்டுவிடவில்லை. நம்முடன் சேர்ந்துகொண்டு தங்களுக்கு ஜாதி முறைப்படி தனிச் சலுகைகள் வேண்டும் என்று கேட்க ஆரம்பித்தார்கள். அதைப்போன்ற நிலைமையும் இதில் ஏற்படும். அதனால் ஜாதி என்ற அடிப்படையில் அவர்களுக்கு சலுகைகள் காட்டாமல் ஹரிஜனங்கள், தொழிலாளர்கள், ஏழை மக்கள் என்ற அடிப்படையில் அவர்களுக்குச் சலுகைகள் கொடுக்கப்படும் என்று அமைக்கவேண்டும். யார் ஏழைகள், யார் யார் தொழிலாளர்கள் என்ற அடிப்படையில் அவர்களுக்கு சலுகைகள் காட்டவேண்டும். அப்படிக் காட்டாவிட்டால் ஜாதி ஒழிப்பு என்பது நடைபெறாது. இந்த அடிப்படையில் தான் சேரிகளில் வசதிகளைச் செய்யவேண்டும், ஜாதியின் பெயரால் செய்யக் கூடாது என்பதை நன்றாக புரிந்துகொள்ளவேண்டும். இப்படிச் செய்யாவிட்டால் ஜாதி ஸ்திரமானதாகத்தான் இருக்கும்.

எங்கள் ஜில்லா பெரிதாக இருப்பதால்தான் ஒரு பகுதி பூராவிலும ஹரிஜனங்களாகவே தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டார்கள். மற்ற பகுதியிலிருந்து ஒருவர்தான் அதாவது மேல தஞ்சையில் கனம் சுப்பிரமணியம் அவர்கள் ஒருவர் மட்டும்தான் வந்திருக்கிறார். ஒரே ஒரு ரிசர்வ் சீட் தான் அந்தப் பக்கத்தில் இருக்கிறது. அந்தப் பகுதிகளில் அதிகாரிகளை நியமித்து அந்த அந்தப் பகுதிகளிலுள்ள ஹரிஜனங்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் அதற்காக அந்த அந்த பகுதிகளிலுள்ள சட்டசபை உறுப்பினர்களைக் கலந்துகொண்டு காரியங்களைச் செய்யும்படியான ஏற்பாட்டைச் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் தான் காரியங்களை கொஞ்சம் சுலுவாக செய்து முடிக்கலாம்.

மாணவர்களுக்கு இப்பொழுது மத்தியான உணவு கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். மத்தியான உணவு கொடுக்கும் வேலையை சேரிகளிலுள்ளவர்களுக்கு கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். அப்படிச் செய்தால் தான் நன்றாக இருக்கும் என்றும் பல சௌகர்யங்களைச் செய்யலாம் என்றும் குறிப்பிட்டார்கள். என்னுடைய அனுபவத்தில் அது சரியல்ல. இந்த விதத்தில் நடத்தினால் சில இடங்களில் பழைய சாப்பாட்டையே மாணவர்களுக்குப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். சாப்பாடு போடும் அதிகாரம் பூராவையும் அங்கு உள்ள நாட்டாண்மைக்காரர்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதால் தங்களைக் கேட்பதற்கு ஆட்கள் கிடையாது என்று அவர்கள் இவ்விதம் மாணவர்களுக்கு சாப்பாடு போடுகிறார்கள். அது சரியல்ல என்பது என்னுடைய அபிப்பிராயம். அதனால் சாப்பாடு போடும் விஷயம் அதிகாரிகளுடைய கண்காணிப்பில் இருக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. ஜாது ஹிந்துக்கள் சாப்பாடு போடுவது என்றால் அதில் பல ஊழல்கள்தான் வருகின்றன. அதைக் கண்காணிக்கவேண்டும். ஹரிஜனங்களை இழிவுபடுத்தியதற்காக அவர்களுக்குப் பிராயச்சித்தம் செய்வதுபோல் ஜாதி ஹிந்துக்களையே ஹரிஜன மாணவர்களுக்கு சாப்பாடு போடும்படியான ஏற்பாட்டைச் செய்யவேண்டும். இதைத்தான் நாம் பின்பற்றவேண்டும்.